*பிரசார்பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை - 4*
*27 09 2026 SUNDAY 6 30 PM*
*வணக்கம் – மாநிலச்செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு தமது அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

- *ஊழலற்ற நிர்வாகத்தை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.*

- *தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், சட்டம் ஒழுங்கிற்கு விலக்களித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணையை தமிழக அரசு விலக்கிக் கொண்டுள்ளது.*

- *மருத்துவ சுற்றுலாவில் தமிழகம் சிறந்து விளங்குவதாக மாநில அமைச்சர் திரு. ராஜேஷ்குமார் கூறியுள்ளார்.*

- *ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று, நான்கு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.*

*>>>>>>><<<<<<*

*விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார். (சவுண்ட் பைட் மோடி (1) 101 செகண்ட்ஸ்)*

*போதையில்லா இந்தியாவை உருவாக்க அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.*

*(சவுண்ட் பைட் மோடி (2) 30 செகண்ட்ஸ்)*

*நெல்லிக்காயின் மருத்துவ குணம் குறித்தும் பிரதமர் தமது உரையில் எடுத்துரைத்தார்.*

*(சவுண்ட் பைட் மோடி (3) 30 செகண்ட்ஸ்)*

இந்த நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து, பொதுமக்கள் தங்களது கருத்துகளை தொடர்ந்து பகிர்ந்து கொள்ள வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட் மோடி (4) 49 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

ஊழலற்ற நிர்வாகத்தை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

நாட்டின் முதலாவது திரவ இயற்கை எரிவாயு அடிப்படையிலான ரயில் சேவையை இன்று குஜராத்தின் சபர்மதி ரயில் நிலையத்தில் தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பசுமை எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் வகையில் இந்த ரயில் சேவை தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரயில்வே துறையில் டீசல் பயன்பாடு, கடந்த 2015ஆம் ஆண்டு 293 கோடி லிட்டராக இருந்ததாகவும், கடந்த நிதியாண்டில் இது 108 கோடி லிட்டராக குறைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. அமித் ஷா கூறினார்.

>>>>>>><<<<<<

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், சட்டம் ஒழுங்கிற்கு விலக்களித்து பிறப்பிக்கப்பட்ட அரசாணை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக மாநில சட்ட அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதற்கான அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

முன்னதாக, திமுக, அஇஅதிமுக, அமமுக, பாமக, இடதுசாரி கட்சிகள் உட்பட பல்வேறு கட்சிகள் இந்த அரசாணையை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தன.

>>>>>>><<<<<<

சுற்றுலா துறையில் தமிழகம் முன்னணியில் திகழ வேண்டும் என்ற நோக்கில் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. ராஜேஷ் குமார் கூறியுள்ளார்.

சர்வதேச சுற்றுலா தினத்தை ஒட்டி, இன்று கோவையில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மருத்துவ சுற்றுலாவில் தமிழகம் சிறந்து விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்திற்கு அதிக எண்ணிக்கையில் சுற்றுலா பயணிகளை ஈர்ப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. ராஜேஷ்குமார் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

மத்திய மண்டல காவல்துறை உயரதிகாரிகள் கூட்டம், காவல்துறை தலைவர் திரு. மகேஷ்குமார் அகர்வால் தலைமையில் இன்று திருச்சியில் நடைபெற்றது.

>>>>>>><<<<<<

திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தில் போதைப்பொருட்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு சைக்கிள் பேரணி இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மானிய உதவியுடன் நாட்டுக்கோழிப் பண்ணை அமைக்க விரும்புவோர், அருகில் உள்ள கால்நடை நிலையங்களை அணுகி, விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு ஆட்சியர் திருமதி. சினேகா கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>>><<<<<<

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கலில், வார விடுமுறையை ஒட்டி இன்று சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர்.

>>>>>>><<<<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் சீற்றம் காரணமாக 50க்கும் மேற்பட்ட வீடுகளில் கடல்நீர் புகுந்தது.

>>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய விளையாட்டு போட்டிகளில் இந்தியா இன்று, நான்கு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டிகளின் Squash ஆடவர் ஒற்றையர் பிரிவில் Abhay Singh-ம் மகளிர் ஒற்றையர் பிரிவில் Anahat Singh-ம், மகளிர் நீளம் தாண்டுதல் பிரிவில் Ancy Sojan-ம், உயரம் தாண்டுதலில் Sarvesh Kushare-வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

மகளிர் 200 மீட்டர் ஓட்டத்தில் Harita Bhadra-வும், ஆடவர் Decathlon பிரிவில் Tejaswin Shankar-ம், மகளிர் Steeplechase பிரிவில் Parul Chaudhary-யும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

குத்துச்சண்டை போட்டியின் மகளிர் 65 கிலோ எடைப்பிரிவில் Parveen Hooda-வும், ஆடவர் 90 கிலோ எடைப்பிரிவில் Narender Berwal-ம் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஹாக்கிப் போட்டியின் லீக் ஆட்டத்தில் இந்தியா 7-0 என்ற கோல்கணக்கில் சிங்கப்பூரை வென்றது.

வாலிபால் போட்டியின் முதலாவது லீக் ஆட்டத்தில் இந்தியா - வியட்நாமை வென்றது.

இப்போட்டிகளில் இந்தியா இதுவரை 4 தங்கம், 16 வெள்ளி, 17 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 12வது இடத்தில் உள்ளது.

>>>>>>><<<<<<

ஆசிய விளையாட்டு Squash போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த Abhey Singh-கிற்கு 50 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையை மாநில அரசு அறிவித்துள்ளது.

-----------------

குரேஷியாவில் நடைபெற்ற சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Anwesha Gowda தங்கப்பதக்கம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-14, 21-10 என்ற செட்கணக்கில் பல்கேரியாவின் Gergana Pavlova-வை வென்று இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

---------------

உஸ்பெகிஸ்தானின் Samarkhand-ல் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் போட்டியில் இந்தியா ஓப்பன் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர் பிரிவில் வெண்கலப்பதக்கதையும் வென்றது.

>>>>>>><<<<<<

இந்தியாவுக்கு எதிரான எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 217 ரன்னுக்கு ஆட்டமிழந்தது

ராஜ்கோட்டில் இன்று தொடங்கிய இப்போட்டியின் ஆட்டநேர இறுதியில் இந்தியா முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 8 ரன் எடுத்துள்ளது.

>>>>>>>END<<<<<<